எண்.5/7/3/7/பதிவாளர்/பால்வளம்/2018/125
புதுச்சேரி அரசு
கூட்டுறவுத்துறை (பால் வளம்)
வி.வி.பி. நகர், தட்டாஞ்சாவடி, புதுச்சேரி - 605 009.
----

புதுச்சேரி, நாள்.14 .08.2023

**சுற்றறிக்கை**

**பொருள்:** பிரதம கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் - தொகுதி பங்கீடு நடவடிக்கை - தொடர்பாக.

***

பல பிரதம கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களின் நிர்வாகக் குழுக்கள், சங்கத்தின் உறுப்பினர் பட்டியலை பல வருடங்களாக சரி செய்யாமல், இறந்த உறுப்பினர்களையும், சங்க விவகார எல்லையில் இல்லாமல் இடம் பெயர்ந்த உறுப்பினர்களையும் சங்க உறுப்பினர் பட்டியலில் வைத்துள்ளது இவ்வலுவலகத்திற்கு தெரியவருகிறது. எனவே, இறந்த உறுப்பினர்களையும், சங்க எல்லையில் இல்லாமல் இடம் பெயர்ந்த உறுப்பினர்களையும் சங்க உறுப்பினர் பட்டியலில் இருந்து நீக்கும்படி அறிவுறுத்தப்படுகிறது.

அவ்வாறு உறுப்பினர் பட்டியல் திருத்தம் செய்த பின்பு, சங்கத்தில் 500-க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் இருந்தால், கூட்டுறவு சங்கங்களின் விதி, 1973, விதி எண் 31-ன் படி சங்கம் அதன் செயல்பாட்டுப் பகுதியை பொருத்தமான தொகுதிகளாகப் பங்கீடு செய்து அதனை சங்க பொதுபேரவையில் வைத்து அனுமதிப்பெற்று தக்க துணைவிதி திருத்தத்திற்கான பிரேரணையை இவ்வலுவலகத்திற்கு அனுப்புமாறு அறிவுறுத்தப்படுகிறது.

மேலும் சங்கத்தை மேம்படுத்தி வளர்ச்சி பாதையில் முன்னோக்கி கொண்டு செல்ல இளைய தலைமுறைகளை உறுப்பினர்களாக சேர்ப்பதற்கு ஆவணசெய்யும்மாறு அறிவுறுத்தப்படுகிறது.

எனவே, இச்சுற்றறிக்கையை நிர்வாகக்குழுவின் பார்வைக்கு அடுத்து வரும் நிர்வாகக்குழு கூட்டத்தில் வைத்து வாசிக்கப்பட்டதற்கான தீர்மானத்தை இயற்றி அதன் நகலை இவ்வலுவலகத்திற்கு உடனடியாக அனுப்பி வைக்குமாறு இதன் மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இச்சுற்றறிக்கை கிடைக்கப்பெற்றதற்கான ஒப்புதல் சான்று கடிதம் உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும்.

OFFICE OF THE REGISTRAR OF CO-OPERATIVE SOCIETIES
PUDUCHERRY

**//ஆணைப்படி//**

6/8 பால்வள அபிவிருத்தி அதிகாரி
கூட்டுறவு துறை

**பெறுநர்**

1. தலைவர்/நிர்வாகி,
   ------------------------------------------கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் (அ) எண்.பி.
   புதுச்சேரி & காரைக்கால்.

**நகல் பெறுவோர்:**

1. மேலாண் இயக்குனர்,
   புதுச்சேரி கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம்,
2. மேலாண் இயக்குனர்,
   காரைக்கால் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம்,
3. துணைப்பதிவாளர், காரைக்கால்.

} தக்க தொடர் நடவடிக்கைகாக

4. The Web Editor.
5. கோப்பு 2023.